# நமது பாரம்பரியம

இயலும் இசையும் எங்கள் உயிரே

எண்ணும் எழுத்தும் எங்கள் கண்ணே

ஆலயம் என்பது எங்கள் பெருமை

விருந்தினர் ஓம்பல் எங்கள் கடமை

உண்ணும் உணவே எங்கள் மருத்துவம்

பனையின் ஓலையில் எங்கள் சரிதம

தரணியே வியந்தது எங்கள் திறமை

கலைகள் எத்தனை எங்கள் கையில்

சிலைகள் சொல்லா உணர்ச்சியும் இல்லை

படுக்கும் பாயும் ஓர் ஊர் கூறும்

காக்கும் பூட்டும் எங்கென்று கூறும்

சிவக்கும் வெற்றிலை சிறப்பு சேர்க்கும்

இனிக்கும் அல்வா பிறந்தவூர் சொல்லும்

ஆரணி பட்டு அழகை சேர்க்கும்

வீரத்தின் கூரை திருப்பாச்சி தீட்டும்

பண்ணிசை பாட்டோடு பாரம்பரியம் செல்வமும்

பழமையைக் காப்பதும் பாரினால் வளமாகும்!

எங்கள் பரம்பரியம் என்றும்

நிலைக்கும் எங்களின் பெருமையை

உலகம் போறற்றித் தொடரும;

ந. மாரியப்பன